பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 08 2026** **MONDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** எஃகு துறை சீரான வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

**3)** தமிழ்தாய் வாழ்த்து தொடர்பான தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற ஒத்துழைப்பு அளித்த அனைத்துக்கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

**4)** தொகுதி மறுவரையறை தொடர்பான பிரச்சினையில் காங்கிரஸ் நிலைப்பாட்டில் தெளிவில்லை என்று திமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5)** **23** வயதுக்குட்பட்டோருக்கான காமன்வெல்த் வாள்வீச்சு போட்டியில் இந்தியா **4** தங்கம் உட்பட **17** பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

எஃகு துறை சீரான வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

நடப்பு நிதியாண்டில் இதுவரை எஃகு உற்பத்தி இரண்டு புள்ளி ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், நாட்டின் ஒற்றுமைக்கான வலிமையை இந்த இயக்கம் எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த இயக்கத்தின்கீழ் நடைபெறும் பேரணியில் பங்கேற்பதோடு, வந்தேமாதரம் பாடலையும் பாட வேண்டும் என்று திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முதலில் தமிழ்தாய் வாழ்த்தை கட்டாயம் பாட வேண்டும் என்ற அரசினர்

தனித்தீர்மானத்தை பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றித் தந்ததற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தமிழ்மொழியின் தொன்மை, தனித்தன்மை, பெருமை மற்றும் தமிழர்களின் உணர்வை போற்றி பாதுகாக்கும் வகையிலான இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானம் தமிழ்தாய்க்கு செலுத்தப்படும் உயரிய மரியாதையாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்மானம் நிறைவேறிய இந்நாள் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்றும் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அரசு நிகழ்ச்சிகளில் முதலில் வந்தே மாதரமும், அதைத்தொடர்ந்து தேசிய கீதமும் பாட வேண்டும் என்றும், பின்னர் தமிழ்தாய் வாழ்த்து பாட வேண்டும் என்றும் மத்திய அரசின் அறிவிப்பாணையில் வற்புறுத்தவில்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு தலைமை நீதிபதி திரு எஸ் ஏ தர்மதிகாரி, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டல் ஜென்ரல் திரு ஏ

ஆர் எல் சுந்தரேசன், தமிழ்தாய் வாழ்த்தை கடைசியில் பாட வேண்டும் என்று அந்த ஆணையில் தெரிவிக்கப்படவில்லை என்றார்.

இவ்வழக்கின் விசாரணை அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஆவின் பால் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்படுவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலம் முழுவதும் கடந்த சில நாட்களாக ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனை களைய உறுதியான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆவின் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு பத்து ரூபாய் உயர்த்தி, கொள்முதலை அதிகரிக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>

கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் பொருளாளர் திரு எல் கே சுதீஷ், இன்று புதுதில்லியில் மத்திய அமைச்சர் திரு மனோகர்லாலை சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்தார்.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த திட்டங்கள் உதவிடும் என்றும் திரு சுதீஷ் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தொகுதி மறுவரையறை தொடர்பான பிரச்சினையில் காங்கிரஸ் நிலைப்பாட்டில் தெளிவில்லை என்று திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியை சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு தயாநிதி மாறன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இப்பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியின் இருவேறு நிலைப்பாட்டினை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் தொகுதி மறுவரையறையே கூடாது என்று காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணியான தவெக அரசு கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இதர மாநிலங்களுக்கு பொருந்துமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொகுதி மறுவரையறையின் மூலம் தெலங்கானா மாநிலத்தின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும் என்று காங்கிரஸ் கட்சியை சேர்ந்த

அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி கருத்து தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்பிரச்சினையை வைத்து காங்கிரஸ் தமிழகத்தில் அற்ப அரசியல் புரிவதாக திரு தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உதகை தாவரவியல் பூங்காவில் இரண்டாம் சீசனுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பூங்காவில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் - 39 Sec. )***

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 37 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு மதுபாலன் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

-----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட சிறார்களுக்கும், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மகளிருக்கும் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட உள்ளதாக ஆட்சியர் திரு விஷ்ணு மகாஜன் தெரிவித்துள்ளார்.

-----------------

கடலூர் மாவட்டத்தில் சமூக பொறுப்புணர்வு நிதியின்கீழ், 25 லட்சம் ரூபாய் மதிப்பில் பெறப்பட்ட மீட்பு உபகரணங்களை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறைக்கு வழங்கினார்.

-----------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாமினை ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மீனவ கிராமத்தில் மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-------------

மதுரை மீனாட்சியம்மன் ஆவணி மூலத்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

-----------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு **8** ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

**23** வயதுக்குட்பட்டோருக்கான காமன்வெல்த் வாள்வீச்சு போட்டியில் இந்தியா **4** தங்கம் உட்பட **17** பதக்கங்களை வென்றது.

நைஜீரியாவின் **Lagos**-ல் நடைபெற்ற இப்போட்டியில், **Nikhil Wagh, Joys Stalinraj, Prachi,** மற்றும் **Jeferlin** தங்கப்பதக்கம் வென்றனர்.

**Aakhri, Kanagalakshmi, Tejas Patil, Lokesh Vemani, Lakshya Badser** ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

**Moramba, Aarya, Shaurya, Anbkess, Hemesh, Tanishka, Anupriya** மற்றும் **Shreya** வெண்கலப்பதக்கம் வென்றனர்.

------------

ஹாங்காங் ஓப்பன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Aadya Budhia** தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் **17** வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

ஜமைக்கா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ruban - Sai Pratheek** இணை பட்டம் வென்றது.

-------------

மலேசியாவுக்கு எதிரான **21** வயதுக்குட்பட்டோருக்கான மூன்றாவது நட்புணர்வு ஹாக்கிப் போட்டியில், இந்தியா **5-3** என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில், அர்ஜூன் இரண்டு கோல் அடித்தார்.

நித்தின், ரோஷன் மற்றும் மணிமாறன் தலா ஒரு கோல் அடித்தனர்.

ஐந்து போட்டிகளை இந்த தொடரை முதல் மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.

--------------

ஆசிய படகு மராத்தான் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உட்பட 7 பதக்கங்களை வென்றது.

ஆடவர் 3 புள்ளி நான்கு கிலோமீட்டர் பிரிவில் **Ravinder Singh** தங்கப்பதக்கத்தையும், **Akshay** மற்றும் **Jaganbir** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் பிரிவில் **Jasmine** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் பத்து கிலோ மீட்டர் பிரிவில் **Sachin, Jaganbir** மற்றும் கலப்பு குழு பிரிவிலும் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

----------------

சர்வதேச இளையோர் வில்வித்தை போட்டி கொரியாவில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Aditi Gopichand Swami, Vaishnavi Kumar Patil** உட்பட எட்டு பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

**<<<<<<END>>>>>**